ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2267/8 - 2022 පෙබරවාරි මස 14 වැනි සඳුදා - 2022.02.14

*2267/8 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, ரஸ்நாயக்கபுர நீர்க்குழாய் நீடிப்பு நீர் வழங்கல் திட்டத்தின், திவுல்லேகொட கன மீற்றர் 600 ஐ உடைய நீர்க்கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை எடுத்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. DVP/*02/03*/KG/*420*
*நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2022, பெப்புருவரி 08.*

1A – G 36064 – 32 (2022/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் நிகவெரட்டிய பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 326, சியம்பலேவ கிராம அலுவலர் பிரிவில், சியம்பலேவ கிராமத்தில் அமைந்த "கலஙங்கஹேன" எனும் காணியில் முழு அளவில் சுமார் 30 பேர்ச்சஸ் அளவிலான கீழ்க்காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.*

காணியின் எல்லைகள் :

வடக்கு : வனப்பிரதேசம் ;
கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : குடாவதுரெஸ்ஸகம வீதி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* *1. திருமதி ஏ. எம். சிட்டம்மா,*
*சியம்பலேவ,*
*திவுல்லேகொட,*
*நிகவெரட்டிய.*

EOG *02-0474*

---

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு குருநாகல் வடக்கு நகர நீர் வழங்கல் திட்டத்தின், கொட்டிகாபொல நீர்க்கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை எடுத்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. DVP/*02*/*03*/KG/*421*
*நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2022, பெப்புருவரி 08.*

**அட்டவணை**

*வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 675, கொட்டிகாபொல கிராம அலுவலர் பிரிவில், கொட்டிகாபொல கிராமத்தில் அமைந்த அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. கனஹசிங்கம் அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 1243A இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 01 இன் பகுதி இனால் குறிப்பிடப்படும்*

"ஹிடினாகெதர வத்த, லியன்கஹகொல்லே மூகலான மற்றும் வெலிகொடே ஹேன" எனும் காணியில் முழு அளவில் சுமார் 20 பேர்ச்சஸ் அளவிலான கீழ்க்காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.

வடக்கு : இலக்கம் 1243A இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 03 இனால் காட்டப்படும் வீதி ;
கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : இலக்கம் 1243A இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 02 இற்கு உரிய காணித்துண்டு.

காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :

1. திருமதி டீ. எம். ஏ. எஸ். பீ. தென்னகோன்,
"காவிந்தயா",
கொட்டிகாபொல,
மாவத்தகம.

2. திருமதி அனோஜா புஸ்பகுமாரி விஜேசிங்க,
"காவிந்தயா",
கொட்டிகாபொல,
மாவத்தகம.

EOG 02-0475

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.